## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

## அசல் வழக்கு எண். 73/2019

பெயர் : ஜோதி P.W.1.

க/பெ. : ராஜதுரை

தேதி : 21.07.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை: –**

**1.** நான் நிரந்தரமாக எங்கு வசித்து வருகிறேன் என்றால் அரும்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். வாதியையும் அவரது சகோதரர்களையும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் தகப்பனார் கண்ணையன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு அவரது சகோதரர்களுக்கும் நல்லாடை மற்றும் அரும்பாக்கத்தில் சொத்துகள் உள்ளது என்றால் சரிதான். நான் வாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் மற்றும் பக்தவச்சலம் என்பவரிகளிடமிருந்து எவ்வளவு சொத்துகளை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் 7 1/2 மா நிலத்தை கிரயம் பெற்றுள்ளேன். தற்போது பாலகிருஷ்ணன் மற்றும் பக்தவச்சலம் ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்களது வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

2. நான் கிரயம் வாங்கிய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தற்போது நினைவில் இல்லை. நான் கிரயம் வாங்கிய சொத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏன் பதிவு செய்யவில்லை என்றால் பாலகிருஷ்ணன் மற்றும் பக்தவச்சலத்தின் மற்ற சகோதரர்கள் கையொப்பம் செய்ய முன்வராததால் பதிவு செய்யவில்லை. நான் வாங்கிய சொத்து பாலகிருஷ்ணன் மற்றும் பக்தவச்சலத்திற்கு அவர்களது தகப்பனார் பிரித்து கொடுத்து சொத்து என மேற்படி நபர்கள் கூறியதால் நான் கிரயம் பெற்றேன். மேற்படி நபர்களுக்கு அவர்களது தகப்பனார் பிரித்து கொடுத்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவர்களுக்கு எந்த தேதியில் ஆவணம் ஏற்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியாது.

3. நான் வாங்கிய சொத்தானது வாதியின் தகப்பனாரான கண்ணையன் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றாலும், அந்த சொதது பிரிபடாத கூட்டு குடும்ப சொத்து என்றாலும் அதனால் மேற்படி சொத்தை நான் கிரயம் பெறவேண்டும் என்றால் கண்ணையனின் வாரிசுகள் அனைவரும் கையொப்பம் செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் வாங்கிய சொத்திற்கான கிரய பணத்தை பாலகிருஷ்ணன் என்பவரிடம் கொடுத்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு பாலகிருஷ்ணனின் வாரிசுகளிடம்

இது குறித்து நான் கேட்டேனா என்றால் இல்லை. பாலகிருஷ்ணனின் மனைவி அடிக்கடி வெளிநாட்டிற்கு சென்று விடுவார். நான் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் தாவா சொத்தை கி்ரயம் பெறாததால் எனக்கு அந்த சொத்து கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

4. நான் தாவா சொத்திற்காக கொடுத்த பணத்திற்கு ஆவணங்கள் எதுவும் எழுதிவாங்கினேனா என்றால் வாங்கியுள்ளேன். அந்த ஆவணம் எனது வீட்டில் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் கிரயம் பெற்றதாக சொல்வது உண்மையல்ல என்றாலும் அவ்வாறு கிரயம் பெற்றிருந்தாலும் அந்த ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.